**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
...

In the Court of the Principal Assistant Sessions Court, Kancheepuram

| | |
|---|---|
| Sessions Case No | SC.71-19 |
| Primary Register Case No | |
| Deposition of Witness for | Prosecution P.W. 2 |
| | Defence |
| | Court: |

| | |
|---|---|
| Name | Shanmugam |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th day of January, 2024.

Signature of Witness.

Name of the Interpreter: Logeswari, Head Clerk.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th day of January, 2024.

Signature of Interpreter.

முதல் விசாரணை—

நான் சுங்குவாரச்த்திரம் கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து 2019ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 1.7.2016 அன்று ஆய்வாளர் அசோகன் அவர்களுடன் நானும் த.கா.407 சண்முகசுந்தரம் ஆகிய இருவரும் ரோந்து பணிக்காக சென்று இருந்தோம். சுங்குவாரச்சத்திரம் இருந்து வாலாஜாபாத் செல்லும் சாலையின் மேம்பாலத்தின் அருகில் முட்புதரில் காலை 5 மணியளவில் ஆஜர் 2 முதல் 5 எதிரகளும் மற்றொரு எதிரி அன்பரசுவும் கத்தி மற்றும் தடி ஆகிய ஆயுதங்களுடன் போய் வருகின்ற நபர்களிடம் கொள்ளையடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தயாராக இருந்தார்கள். எதிரிகள் ஐவரும் எங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தார்கள். அவர்களை நாங்கள் துரத்தி 1வது எதிரி அன்பரசுவை மட்டும் பிடித்தோம். 1வது எதிரி தாமாக முன்வந்த கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் என் முன்னிலையிலும் அச.ா2 சண்முகசுந்தரத்தின் முன்னிலையிலும் பதிவு செய்தார். அந்த வாக்குமுலத்தில் 1வது எதிரி 2 முதல் 4 எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லி சம்பவத்திற்கு தயாராக இருந்ததாக தெரிவித்திருந்தார். அந்த ஒப்புதல் வாக்குமுலத்தில் நானும் அ.சா.1 சண்முகசுந்தரமும் கையெழுத்து செய்தோம். 1வது எதிரி ஆஜர் செய்த கத்தியை ஆய்வாளர் கைப்பற்று மகசர் தயார் செய்த கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் வெள்ளை, நீலம் மற்றும் சிகப்பு நிறம் கொண்ட கைப்பிடியுடன் கூடிய கத்தியை 1வது எதிரி ஆஜர் செய்தது தான். அந்த கத்தி சா.பொ.2 ஆகும். அந்த கத்தியை என் முன்னிலையிலும் அ.சா.1 சண்முகசுந்தரம் முன்னிலையிலும் ஆய்வாளர் கைப்பற்று மகசர் தயார் செய்தார். அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்று மகசர் அ.த.சா.ஆ.3 ஆகும். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமுலத்தின் முதல் கையெழுத்து அ.த.சா.ஆ.4 ஆகும். இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை=

நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும் 1வது எதிரி அன்பரசுவை நான் அவருடைய வீட்டில் இருந்து ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க கா.நிலையத்திற்கு அழைத்து வந்து அங்கு வைத்து தான் கைது செய்தோம் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.3 கைப்பற்று மகசரில் உள்ள பொருட்களை கா.நிலையத்தில் உள்ளதனை வைத்து அந்த ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் ஆள் நடமாட்டம் உள்ள ஒரு முக்கிய பகுதி என்ற காரணத்தினால் நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவம் நடைபெற வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அது போல் 2வது எதிரி பெருமாள் த/பெ கோதண்டபாணி மற்றும் 3வது எதிரி மாதவன் ஆகியோருக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் அவர்களை இந்த வழக்கில் வேண்டுமென்றே சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் உத்திரவிற்கிணங்க பொய்யான வழக்கு புகாரை தயார் செய்து எதிரிகள் மித வழக்கை ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. 1 வது எதிரியிடம் இருந்து எவ்வித சா.பொருட்களையும் குறிப்பாக சா.பொ2 யை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை =

அ.சா.ஆ3 கைப்பற்று மகசரில் நான் கையெழுத்து செய்த இடத்திற்கு முன்னர் பெருக்கல் குறியீடு உள்ளது. அ.சா.ஆ4 கையெழுத்திற்கு முன்னர் பெருக்கல் குறியீடு உள்ளது. சம்பவத்தன்று 1வது எதிரி அன்பரசு மட்டும் தான் கைது செய்யப்பட்டார். 4 மற்றும் 5 எதிரிகளை சம்பவத்தன்று நாங்கள் கைது செய்யவில்லை என்றால் சரிதான். 4வது எதிரி புரட்சி பாரதம் என்ற கட்சியை சார்ந்தவர் என்ற காரணத்தினாலும் 5வது எதிரி 4வது எதிரியின் உறவினர் என்ற காரணத்தினாலும் அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக அவர்களை இவ்வழக்கில் உயரதிகளின் உத்திரவிற்கிணங்க எதிரிகளாக சேர்த்துள்ளோம் என்றால் தவறாகும். 4 மற்றும் 5 எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 4 மற்றும் 5 எதிரிகஞ்க்கு எதிராக எந்த ஒரு குற்றசாட்டும் எந்த ஒரு சாட்சிம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை = இல்லை